முருகப்பெருமான் துணை

**மகான் வரதரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.01.2023**, வியாழக்கிழமை

1. பலபிறவி கொண்ட தவபலத்தை
பாமரர்க்கும் அருளும் வண்ணம்
வேலவன்பால் வேண்டி கலியினில்
வெற்றிதரும் ஞான அவதாரம் கண்ட
2. கண்டநல் ஆறுமுக அரங்கனே
கலியினில் உன் பெருமை கூறி
உண்டான சுபகிருது கலைதிங்கள்
உயர்வான பஞ்சதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 05 ம் நாள் 19.01.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
வழங்குவேன் வரதரிஷி யானும்
சோரமிலா நல்லுலகம் அமைய
சுத்த சன்மார்க்க நெறி பரவ வேண்டும்
4. வேண்டியே வேலவன் இடத்தில்
வினை வென்று கலிவாழ் மக்களை
தொண்டர்களாகத் தொண்டு வழியில்
தூய்மைபடுத்தி வழிகாட்டி இனிதே
5. இனிதே உயிர்கொலை நீக்கி
எவ்வுயிரும் தன்னுயிர் போல் கருத
கனிவு கொண்ட மக்களாக்கி
கந்தவேலன் உன்னை வணங்க
6. வணங்கச் சரவணச் சுடரேற்றி
வையகமே அந்தச் சுடரில்
இணங்கிச் சுத்தி ஆகிடவே
இந்தவித மாற்றம் நிகழ்த்துவேன் என
7. நிகழ்த்துவேன் என களமிறங்கிய ஞானியே
ஞான தேசிகனே உன்வழி ஞானிகள்
அகிலம் காக்கும் முகாந்திரமாக
ஆதரவு தந்து இணைந்துள்ளோம்
8. உள்ளபடி பிரணவக் குடில் நோக்கி
உலகோர் தொடர்ந்து வந்தால்
கள்ளமிலா சிந்தை தெளிவு
கபடமிலா செயல்கள் சிறந்து
9. சிறந்துமே பிறவிப் பயனடைய
சிறப்பறிவு எனும் ஞானம் கூடி
பரந்த உலகினில் ஞான வாழ்வு
பரிபக்குவம் பெற உண்டான வழி வகை

10. வகையாக குருவருள் கொண்டே
வசமாகும் எனும் உண்மை விளங்கி
மிகையான கடைத்தேற்றும் கடவுள்
முருகப்பெருமான் சக்தியாக வந்த

11. வந்தநல் அரங்கமகா ஞானியே
வையகம் மாற்றும் தலைவனென
சிந்தையில் விளங்கி சரணாகதி
சித்தமாகிட உலகமே ஞானலோகம் ஆகிடும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–